**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.195/2015**

2025–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20–ம் நாள் வெள்ளிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 20.06.2025 | கணவர் பெயர்: | மதிவாணன் |
| பெயர்: | கலாவதி<br>(PW-1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | அரூர் | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 60/2025 |

**<u>1, 3 மற்றும் 4–ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : 20.06.2025</u>**

1. எனது கணவர் தாவா 4, 5 6 அயிட்ட சொத்துகளை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், சுவாதீன மீட்பு பரிகாரமும் கோரி வாக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கு முழு விசாரணைக்கு பிறகு 2018–ம் வருடத்தில் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும் சமயத்தில் எனது கணவர் இறந்துவிட்டார் அதனால் மேற்படி வழக்கில் நான் அதில் வாரிசாக இருந்து வழக்கு நடத்தியுள்ளேன் என்றால் சரிதான்.

2. மேற்படி வழக்கில் 05.07.2002–ம் தேதியில் குடும்ப சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை ஆகிவிட்டது என்று இவ்வழக்கின் 1–ம் பிரதிவாதியான மணிமாறன் கட்சி செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வழக்கின் தீர்ப்பினை எதிர்த்து மேல்முறையீடு ஏதம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் எனது முதல் விசாரணையில் வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9 ஆக குறியிடு செய்யப்பட்ள்ளது என்றால் சரிதான்.

3. இந்த வழக்கில் 1 முதல் 3 வரை அயிட்ட சொத்துக்களை பொறுத்துதான் பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பின்னிட்டு 4 5 மற்றம் 6 அயிட்ட சொத்துக்கள் சேர்க்கப்பட்டது என்றால் சரிதான். எனது கணவர்தான் குடும்பத்தில் மூத்த மகன் என்றால் சரிதான். எனக்கு எனது கணவர் மதிவாணனுடன் திருமணம் முடிந்த 3 , 4 வருத்திலேயே தனி குடித்தனம் சென்றுவிட்டோம் என்றால் இல்லை 15 ஆண்டுகள் ஒன்றாக வாழ்ந்த பிறகு தான் தனி குடித்தனம் சென்றோம். 15 ஆண்டுகள் ஒன்றாக வாழ்ந்தோம் என வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

4. முதல் பிரதிவாதி மணிமாறனுக்கு கடந்த 1991–ம் வருடம் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி திருமணத்தில் நானும் எனது கணவரும் கலந்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல. திருமணத்தில் கலந்துகொண்டோம். எனது கணவரின் மற்றொரு சகோதரரான மணிமொழி என்பவருக்கு 1993–ம் வருடம் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். கடைசி மகன் மகேஷ் என்பவருக்கு கடந்த 2001–ல் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி திருமணத்தில் நானும் எனது கணவரும் கலந்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல. கலந்துகொண்டோம்.

5. கடைசி மகன் மகேஷ் திருமணம் முடிந்த பிறகு 05.07.2002–ல் கிராம முக்கியஸ்திரகள் மற்றும் உறவினர்கள் முன்னிலையில் குடும்ப சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதன் படி சகோரர்கள் நால்வருக்கும் தலா 2 ஏக்கர் நிலமும், தலா 8 செண்ட் வீதம் குடியிருப்பு மனை ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எங்களுக்கு ஒதுக்கப்பட்ட 2 ஏக்கர் நிலமும், 8 செண்ட் மனையும் என் வசத்தில்தான் உள்ளது என்றால் சரியல்ல. தற்போது குடும்ப சொத்தில் இருந்து எந்த சொத்தும் எங்கள் வசம் இல்லை என்றால் சரிதான். தாவா 4, 5, 6 அயிட்ட சொத்துக்களை மணிமாறன் அனுபவித்து வந்து

கரும்பு சாகுபடி செய்து வந்தார் என்றால் சரிதான். அவ்வாறு நடந்தது எனது மாமனார் காலத்தில்தான்.

6. மணிமாறன் கரும்பு சாகுபடி செய்த காலத்தில் கடந்த 2007-ம் வருடம் கரும்பு கொல்லையை நானும் எனது கணவரும் சேர்ந்து தீயிட்டு கொளுத்தியதாக வழக்கு நடந்தது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எங்களுக்கு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் எங்களுக்கு தண்டனை வழங்கப்பட்டது. ஆனால் மேல்முறையீட்டில் எங்களுக்கு விடுதலை வழங்கப்பட்டது. 2010-ம்வருடத்தில் எனது மாமியார் சின்னாச்சி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருடைய இறப்பில் எனது குடும்பத்தார் கலந்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.9/1 -ல் 2 ஏக்கர் 5 செண்டும் சர்வே எண்.6/1-ல் 33 செண்டும் எனது அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் இல்லை. மேற்படி இரண்டு சர்வே எண்களும் எனது அனுபவத்தில் இல்லை வேறு யாரிடம் இருப்பதற்கு என்பதற்காக ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் கிராம நிர்வாக அலுவலரிடம் விசாரித்தால்தான் தெரியும்.

7. சர்வே எண்.9/1 -ல் 2 ஏக்கர் 5 செண்டு சர்வே எண்.6/1-ல் 33 செண்டு ஆகிய நிலங்களில் இந்த வருடமும் சம்பா நெல்சாகுபடி செய்தும், பயிர், உளுந்து சாகுபடி செய்தும், மகசூல் செய்தேன் என்றால் சரியல்ல. 05.07.2002-ல் குடும்ப சொத்துக்கள் அனைத்தும் அனைவருக்கும் பிரிக்கப்ட்டு தனித்தனியாக வசம் எடுக்கப்பட்டு அவரவர்கள் உடமையிலும், அனுபவத்திலும் வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் திருமணம் ஆன காலத்தில் இருந்து மற்ற குடும்ப உறவினர்களுடன் விரோதம் வளர்த்துகொண்டு, அதன் காரணத்தினால் அவர்களுக்கு தொல்லை கொடுக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8. பிராதில் கோரியபடி எனக்கு 1/5-ல் பாகம் கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. கூட்டு அனுபவம் முறையில் இந்த வழக்கு தாக்கல் செய்தது சட்டப்படி

செல்லாது என்றால் சரியல்ல.

1, 3, 4–ம் பிரதிவாதிகள் சார்பில் குறுக்கு விசாரணை முடிவுற்றது.

2–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது.